**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.108/2022**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லுச்சாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | ஆட்டோ டிரைவர் |
| கிராமம் | : | வலசை | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 25th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் வலசையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஐ எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 05.09.2020ம் தேதி, அதிகாலை 04.00 மணிக்கு ஜக்கம்மாள் கோவில் பக்கம் சத்தம் கேட்டு நான் அங்கு போய் பார்த்தபோது பாலமுருகனை எதிரிகள் மாரியப்பன், மனோஜ் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. தடுக்க போன பொன்னுமணி, முத்துகார்த்திகா ஆகியோர்களை எதிரிகள் அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல. எதிரி விமல் பொன்னுமணியை

அசிங்கமாக பேசி செருப்பை கொண்டு அடித்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்த நான் சத்தம் போடவும் எதிரிகள் பாலமுருகனையும், அவரது மனைவி மற்றும் மகளைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. காயம்பட்ட பொன்னுமணியை தென்காசி அரசு மருத்துவமனைக்குகொண்டு போய் சேர்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.26 13:41:22 +0530